**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. மரம் செடி கொடிகள் எவற்றைத் தூவி வணங்கும்?
2. வெ. இராமலிங்கனார் மறைந்த ஆண்டு எது?
3. ஞாயிறு எது போல வலம் வருகிறது?
4. திருக்குறள் எத்தொகுப்பில் இடம்பெற்று உள்ளது?
5. நான்மணிக்கடிகை ஆசிரியரின் ஊர்ப்பெயர் என்ன?
6. காரியாசானின் ஆசிரியர் யார்?
7. பாரதியார் பணியாற்றிய நாளிதழ் எது?
8. திருஞானசம்பந்தர் பிறந்த இடம் எது?
9. 'வாழ்க' என்ற சொல்லில் விகுதி எது?
10. முல்லை நிலத்திற்குரிய சிறுபொழுது என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. மூன்றாம் நந்திவர்மன் காலம் எது?
2. பள்ளர்களுக்கு எது சொந்தமாக இருப்பது இல்லை?
3. வாணிகம் செய்வார்க்குச் சிறந்த வாணிகம் யாது?
4. நிலவை ஏன் போற்ற வேண்டும்?
5. 'மரணத்துள் வாழ்வோம்' என்ற நூலைப் பற்றி எழுதுக.
6. ரைட் சகோதரர்கள் வடிவமைத்த வான ஊர்தியைப் பற்றி எழுதுக.
7. மையீற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி என்றால் என்ன?
8. பிறிதுமொழிதல் அணி என்றால் என்ன?
9. கண்ணதாசனால் எழுதப் பெற்ற கிறித்தவ நூல் எது?

10. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
11. 'பூ+கொடி' = பூங்கொடி இதற்கான புணர்ச்சி விதி எழுதுக.
12. நண்பரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
13. இந்த உலகத்தில் நிலைப்பெற்றிருக்கச் செய்ய வேண்டுவது யாது?
14. மாமழையை ஏன் போற்ற வேண்டும்?
15. தமிழ்நாட்டின் சிறப்புகள் யாவை?

**பகுதி – இ**

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. குற்றாலம் மற்றும் சித்திரச் சபையின் சிறப்புகள் யாவை?
2. பதம் என்றால் என்ன? பகுபத உறுப்புகள் யாவை?
3. சாலை இளந்திரையன் பற்றி குறிப்பு வரைக.
4. இரட்டுற மொழிதல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் திருமணப்பந்தலின் தோற்றம் குறித்து விளக்குக.
6. நாரை விடு தூது பற்றி நூல் வழி விளக்குக.
7. பெயர்ச்சொற்களின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
8. கவியரசு கண்ணதாசன் பற்றிக் குறிப்பு வரைக.

**பகுதி – ஈ**

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Aswer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. விடை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. நாட்டுபுறப்பாடல் என்றால் என்ன? ஆராரோ ஆரீவரோ! என்னும் பாடலின் கருத்தை விளக்குக.
3. முக்கூடற்பள்ளு பாடல் கருத்தினை எழுதுக.

**பகுதி – உ**

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. சமய இலக்கியம் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. 'வான ஊர்தி' என்னும் பாடப்பகுதியில் கொடுத்துள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

.....